KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Vorsteher

**Alex Hürzeler**, Regierungsrat
Bachstrasse 15, 5001 Aarau
www.ag.ch/bks

பெறுனர்
ஆர்காவ் ஆரம்பப் பள்ளியின்
மாணவர்களின் பெற்றோர்

Tamil

மே 2020

**ஆரம்ப பள்ளிகளில் 2020 மே 11 முதல் மீண்டும் பாடசாலையில் கல்வி கற்றல்**

அன்புள்ள பெற்றோர்களே,

மே 11, 2020 திங்கள் முதல், ஆர்காவ் தொடக்கப் பள்ளிகளில் வகுப்புகள் மீண்டும் பள்ளி கட்டிடத்தில் நடைபெறும். ஃபெடரல் கவுன்சில் (Bundesrat) 2020 ஏப்ரல் 29 அன்று சுவிட்சர்லாந்து முழுவதுக்கும் இதனை முடிவு செய்துள்ளது. அதே நேரத்தில், அரசு பொது சுகாதார கூட்டாட்சி அலுவலகமானது (BAG) பள்ளிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முக்கிய அளவுருக்களை அமைத்துள்ளது. தொலைதூரக் கல்விக்கான கட்டம் மே 8 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. அதன் பின்னர், உங்கள் பிள்ளை மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி அல்லது உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லலாம்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

பாடசாலையில் கல்வி கற்பித்தலை மீண்டும் தொடங்குவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் BAG இன் அளவுருக்களை அடிப்படையாகக் கொண்டவை, அவை சுவிட்சர்லாந்து அனைத்திற்கும் பொருந்தும். மாணவர்களுக்கு தொலைதூர விதிகள் இல்லை என்று அவைகள் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றன. குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் வகுப்பு சங்கத்திலும், பள்ளிக்கு செல்லும் வழியிலும், இடைவேளை இடங்களிலும் சாதாரணமாக நடந்து கொள்ளலாம்.

ஆகையால், ஆசிரியர்களைத் தொடர்பு கொள்ளும்போது மாணவர்கள் முடிந்தவரை குறைந்தபட்சம் இரண்டு மீட்டர் தூரத்தை வைத்திருக்க வேண்டும். பெரியவர்களுக்கு பொருந்தும் இரண்டு மீட்டர் தூர விதிகளையும் ஆசிரியர்கள் ஒருவருக்கு எதிராக ஒருவர் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், பள்ளி கட்டிடத்தைப் பயன்படுத்தும் அனைத்து மக்களும் சுகாதார விதிகளை கடைபிடிக்க வேண்டும் (கை, பொருள் மற்றும் மேற்பரப்பு சுகாதாரம், கைகுலுக்க கூடாது போன்றவை).

திரவ சோப்பு புட்டிகள் மற்றும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய துண்டுகள் கொண்ட கை கழுவும் தொட்டி தவிர கூடுதலாக, கை சுகாதாரத்திற்காக பல்வேறு வாய்ப்புகள் (பள்ளி நுழைவாயில், நூலகம் அல்லது மற்றவை), கிருமிநாசினிகள் உட்பட பள்ளி கட்டிடத்தில் கிடைக்கும்.

இருப்பினும், மாணவர்கள் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டும். மேற்பரப்புகள், சுவிட்சுகள், ஜன்னல் மற்றும் கதவு தாழ்ப்பாள்கள், படிக்கட்டுக் கைப்பிடிக்கம்பிகள் மற்றும் கழிப்பறை உள்கட்டமைப்பு மற்றும் கை கழுவும் தொட்டி ஆகியவை சரியான இடைவெளியில் சுத்தம் செய்யப்படுகின்றன.

## பாடங்கள், மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ்

பாடத்திட்டங்கள் மற்றும் பொருந்தக்கூடிய மணிநேர அட்டவணைகளுக்கு ஏற்ப வகுப்புகளில் பாடங்கள் மீண்டும் நடைபெறும். தற்போதைய பள்ளி ஆண்டின் வருடாந்திர மதிப்பெண்களைப் பொறுத்தவரை, அதற்குள்ள பள்ளி ஆண்டு தொடக்கமான ஆகஸ்ட் 12, 2019 முதல் இருந்து மார்ச் 13, 2020 வரை இருக்கும் சாதனை சார்ந்த ஆவணங்கள், மற்றும் பள்ளியில் வழக்கமான பாடங்களிலிருந்து கிடை க்கப்படும் மே 11 முதல் பள்ளி ஆண்டு இறுதி வரை யுள்ள சாதனை சார்ந்த ஆவணங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அனைத்து மேல்வகுப்புக்குரிய உயர்வு சம்பந்தமான முடிவுகளும் ஆண்டு சான்றிதழின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

## பராமரிப்பு சலுகை மற்றும் கூடுதலான தகவல்கள்

பள்ளிகளில் கற்பித்தல் மீண்டும் தொடங்கப்படுவதால், தற்காலிகமான குழந்தை பராமரிப்பு ஏற்பாடு மே 11 முதல் நிறுத்தப்படும்.

பி ன்வரும் இடங்களில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான கூடுதல் தகவல்களையும் பதில்களையும் நீங்கள் காணலாம்:

அரசு பொதுசுகாதார கூட்டாட்சி அலுவலகம் (BAG): www.bag.admin.ch
ஆர்காவ் கன்டோன்: www.ag.ch/coronavirus

தொலைதூரக் கற்றல் கட்டத்தில் உங்கள் குழந்தையை ஆதரித்தமைக்கும், உங்கள் பள்ளியுடன் நல்ல மற்றும் புரிந்துகொள்ளும் ஒத்துழைப்புக்கும் மிக்க நன்றி. அவ்வாறு தாங்கள் செய்ததன் மூலம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கல்வியில் அவர்கள் அசாதாரண காலங்களில் கூட ஒரு முக்கிய பங்களிப்பை செய்கிறீர்கள்.

அன்புடன்



Alex Hürzeler, அரசு கவுன்சிலர்